பக்கங்கள் நான்கு
அன்பளிப்பு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 06 புதன்கிழமை (22-11-1995) **UTHAYAN** A Lively National Tamil Daily கதிர் 352

# அரியாலை பகுதியில் படையினரை வழிமறித்துப் புலிகள் உக்கிரச் சமர்!

## பத்துப் போராளிகள் வீரச்சாவு

சாவகச்சேரி, நவம்பர் 22

நாயன்மார்கட்டுப் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை அகோர ஷெல் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டவாறு முன்னேறிய படையினரை அரியாலைப் பகுதியில் வைத்து புலிகள் வழிமறித்தனர். விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் கடும் சண்டை நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய மோதலில் பத்துப் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நண்பகல் அளவில் சற்று ஓய்ந்த மோதல் தொடர்ந்து நடைபெறுவதாக களத்தில் இருந்து நேற்றிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கண்ணி வெடிகளாலும் பீரங்கிகளாலும் படையினருக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை தமது நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்த படையினர் மிதி வெடிகள் கண்ணி வெடிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் 20 தமிழர்கள் நேற்று மாலை கைதாகினர்

புறக்கோட்டை மத்திய பஸ்நிலையத்திலும், குணசிங்கபுர பஸ்நிலையப் பகுதியிலும் புறக்கோட்டைப் பொலீஸார் நேற்று மாலை நடத்திய திடீர் சோதனையின் போது 20 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக புறக்கோட்டைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறியதாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

கொழும்பு நகரப் பகுதி எங்கும் தொடர்ந்து தேடுதல் நடத்தப்பட்டு வருகிறது.

இதேவேளை—

இனங்காணமுடியாத நபர்களுக்கு அறைகளை வாடகைக்கு விடவேண்டாம் என பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை பகுதிகளில் உள்ள லொட்ஜ் உரிமையாளர்களை பொலீஸார் எச்சரித்திருப்பதாகவும் இலங்கை வானொலி தெரிவித்தது. (ஐ)

## எந்நேரமும் தாக்குதல் நடக்கலாம்
## விசேட படையணிகள் கொழும்பில் தயார் நிலை!

கொழும்பு, நவ. 22

தலைநகர் கொழும்பை விடுதலைப் புலிகள் தாக்குவதைத் தடுப்பதற்கு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

தானியங்கித் துப்பாக்கிகளுடன் நகரில் படையினர் திடீர் சோதனைகளை நடத்துவதாகவும் —

பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு கட்டமாக கொழும்பு நகரின் சில வீதிகளில் மாலை வேளையில் வாகனப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீரெனச் செயற்படத்தக்க விசேட படையணிகளும் கொழும்பில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் படையினர் தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ள இவ்வேளையும் விடுதலைப் புலிகள் கொழும்பைத் தாக்க முயற்சிப்பர் என்பது நிச்சயம் என ராஜதந்திர வட்டாரங்கள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (ஐ-6)

## யாழ். நகரில் ராணுவத்தினருக்கு எஞ்சப் போவது இடிபாடுகள்தான்!

### பி. பி. ஸி. நிருபர் கூறுகிறார்

லண்டன், நவ. 22

படையினர் யாழ். நகரைக் கைப்பற்றினாலும் அங்கு அவர்களுக்கு மிஞ்சி இருக்கப் போவது வெறும் இடிபாடுகள் தான்.

பி. பி. ஸியின் கொழும்பு நிருபர் ஜோர்ஜ் ஆனி இவ்வாறு கூறினார்.

இலங்கை நிலைவரம் தொடர்பான தனது விமர்சனத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-

ஸ்ரீலங்கா கொடி யாழ். நகரில் ஏற்றப்படும் வேளையில் கொளுத்திக் கொண்டாடுவதற்கென பெருந்தொகையான வெடிகள் கொழும்பில் வாங்கிக் குவிக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு வெடிகள் கொளுத்தப்படும் வேளையில் கொழும்பில் தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அலரி மாளிகைக்கு அருகே செல்லும் காலி வீதி, டுப்ளிக்கேசன் வீதி, என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் இரு இனத்தவர்களிடையேயும் சந்தேகம் வலுவடைந்து வருகிறது. தமிழர்கள் பல இடங்களிலும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் புகைமண்டலம்

யாழ். நகரப்பகுதி மற்றும் கரையோரப் பகுதியின் மீது படையினர் மேற்கொண்டுள்ள அகோர ஷெல் தாக்குதலால் யாழ்ப்பாணம் புகைமண்டலமாகக் காட்சி அளிப்பதாக களத்தில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பலாலியில் இருந்து முன்னேறும் படையினரும் ஏவும் ஆட்லறி ஷெல்கள் பழைய பூங்கா, யாழ். செயலகப் பகுதி ஆஸ்பத்திரிப் பகுதி, மற்றும் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடிப்பதால் நகரே அதிர்வதாகவும் —

வெடிக்கும் ஷெல்களால் புகைமண்டலமாகவும் காட்சியளிப்பதாகவும் —

கட்டடங்கள். வீடுகள் இடிந்து சேதமாகியுள்ளதாகவும் — களத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. (இ-3)

## பொலிகண்டியில் நேற்று மாலை புக்காரா குண்டு வீச்சு!

### மூவர் பலி! அறுவர் காயம்!!

வடமராட்சி, நவ. 22

வடமராட்சி பொலிகண்டி சின்னாவளைப் பகுதியில் நேற்றுமாலை புக்காரா விமானம் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் மூவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

குடியிருப்புப் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட இக்குண்டு வீச்சினால் சில வீடுகளும் சேதமடைந்தன.

நேற்று மாலை 5.10 மணி அளவில் வடமராட்சிப் பகுதியை வட்டமிட்ட புக்காரா விமானம் பொலிகண்டி சின்னாவளைப் பகுதியில் 6குண்டுகளை வீசியது.

இச்சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களில் ஒருவர் வல்வெட்டித்துறை வேம்படியைச் சேர்ந்த பாலச்சந்திரன் ஞானச்சந்திரன் (வயது 23) ஆவார்.

ஏனைய இருவரின் சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை.

சுமார் 25 அல்லது 30 வயது மதிக்கத்தக்க இந்த இரு இளைஞர்களினதும் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இச்சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் ஜி.சி.ஈ பரீட்சை இல்லை

கொழும்பு, நவ. 22

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சையை அடுத்தமாதம் திட்டமிட்டபடி நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி பாதுகாப்புஅமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டம் ஒன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், கல்வி உயர் கல்வி அமைச்சு அதிகாரிகள், பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலும், மன்னார், வவுனியா மாவட்டங்களில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்களிலும் இந்தப் பரீட்சையை அடுத்தமாதம் நடத்துவதில்லை என்றும் —

இந்தப் பகுதிகளுக்குப் பின்னர் ஒரு திகதியில் இப்பரீட்சையைத் தனியாக நடத்துவது என்றும் அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## ஆலயங்களுக்கும் சேதம்

பொலிகண்டிப் பகுதியில் புக்காரா விமானம் நேற்று நடத்திய தாக்குதலில் சல்லி வீரகத்தி விநாயகர் ஆலய வசந்த மண்டபமும் மகா மண்டபம் பலத்தசேதமடைந்தன.

அத்துடன் கந்தவன ஆலய கூரைப் பகுதியும் அதன் பின்னால் இருந்த சாரதா சேவாச்சிரமமும் சேதமடைந்தன. [இ-80]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

புதிய Shriram Honda E 650 K ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு மணியம் மாஸ்டர், ஐயா கடையடி, மீசாலை.
(39266)

### தவறிவிட்டது

பத்மநாதன் சந்திரலீலா ஆகிய எனது அடையாள அட்டை, குடும்ப அட்டை, உலர்உணவு அட்டை, பேஸ் அடங்கிய லெதர் பாக் கேரதீவு நாவற்குழி பாடசாலைக்கும் சிறுவர் பூங்கா வீதிக்கும் இடையில் 19-11 95 இல் தவறிவிட்டது. எடுத்தவர்கள் சாவகச்சேரி பளை, தென்னைவள கூட்டுறவு சங்கம், டச்சு வீதியில் ஒப்படைக்கவும்.
(39262)

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியிலிருந்து 16-11-95 இடம்பெயர்ந்தோருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட பஸ்ஸில் சாவகச்சேரி செல்கையில் நூல்கள், முக்கிய ஆவணங்கள் திறப்புகள் அடங்கிய A. Ramanathan பெயரிடப்பட்ட நீல பயணப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அன்பு கூர்ந்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அ. இராமநாதன் C/o ம. கங்காதரம், சரசாலை வடக்கு
(39247)

19-11-95 அன்று சரசாலை வடக்கு கணேச வித்தியாசாலைக்கு அருகிலுள்ள ஆஷா வீதியில் மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ. சங்கரலிங்கம், ஆஷா வீதி, சரசாலை வடக்கு எனும் முகவரியில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(39355)


# அமெரிக்க அதிகாரி கூறியதான செய்தி குறித்து கவலை தெரிவிப்பு

## பல்கலைக்கழக சமூகம் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 22

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான பணியகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறியதாகக் குறிப்பிட்டு —

ஸ்ரீலங்கா அரசின் வானொலி இம்மாதம் இரண்டாவது வாரத்தில் ஒலிபரப்பிய ஒரு செய்தி குறித்து—

யாழ். பல்கலைக்கழக சமூகம் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்து—

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

விடுதலைப்புலிகளின் விடாப்பிடியான போக்கும், வன்செயலுக்குத் தூபமிடும் நிலையுந்தான், தமிழ் மக்கள் அனுப்விக்கும் இன்னால்களுக்கான காரணமாகும். யுத்த நிறுத்தம் விடுதலைப் புலிகளாலேயே மீறப்பட்டது — என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தென்னாசிய விவகாரங்களுக்கான பணியகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறுயதாக வானொலி ஒலிபரப்பிய அந்தச் செய்தி குறித்த உண்மை நிலை அந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

போர் இடை நிறுத்தம் விடுதலைப்புலிகளாலேயே மீறப்பட்டது என்பது உண்மைக்குப் புறம்பானதாகும் என்று பல்கலைக்கழக சமூகத்தினர் தக்க காரணங்களுடன் தமது கடிதத்தில் விளக்கி உள்ளனர்.

அரசின் தவறான அணுகுமுறைகளாலேயே போர் இடைநிறுத்தம் முறிந்து போனது என்பதும் அந்தக் கடிதத்தில் அம்சம் அம்சமாக விளக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய அரசியலில் அக்கறைகாட்டுவதும் போதிய தகவல் வளங்களையும் கொண்டதுமாகிய அமெரிக்கா, உண்மைகளை தெரிந்தும் விளங்காமலும் இருந்திருக்கமுடியாது. பெயர் குறிப்பிடப்படாத ஒரு வெளிவிவகார அதிகாரி கூறிய ஒரு கூற்றாக இருந்தாலும், கௌரவமிக்க அமெரிக்காவின் பெயரால் இத்தகவல் சிறீலங்கா அரசினால் பிரசாரப்படுத்துவதனால் எம்மக்களை அச்செய்தி புண்படுத்தியுள்ளது. இக்கட்டான இடர்களையும், இன்னல்களையும் அனுபவிக்கும் எம்மை இப்பிரசாரம் மேலும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் உலகிலே பேணிப்பாதுகாக்கும் அமெரிக்கா, சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களுக்கு ஆதரவு நல்காதென நம்புகிறோம். ஆனால் இச்செய்தி அரசின் மனித உரிமை மீறல்களுக்குத் தூபமிடுவதாக அமைகின்றது. அமெரிக்காவிலிருந்து இத்தகைய ஒரு செய்தி வந்திருக்காதென நம்புகிறோமாயினும், இச்செய்தியால் ஏற்பட்ட புண்ணை ஆற்றுதற்கு அமெரிக்க மக்களும் அரசும் ஆவனசெய்யுமென நம்புகிறோம். — என்றும் பல்கலைக்கழக சமூகத்தினரால் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ். தபால் ஊழியருக்கு

சாவகச்சேரி, நவ. 22

யாழ். அஞ்சலக ஊழியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது,

யாழ். அஞ்சல் அலுவலகத்தை அங்கு இயங்க வைப்பது குறித்து இக் கலந்துரையாடலில் முக்கியமாக ஆராயப்படவுள்ளது. (ஐ)

## இலங்கை வங்கி மேற்தரக் கிளை ஊழியருக்கு

சாவகச்சேரி, நவ. 22

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிய இலங்கை வங்கி மேற்தரக் கிளை ஊழியர்கள் அனைவரையும் இன்று புதன் கிழமை முதல் இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளைக்கு சமூகமளிக்குமாறு தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

# 10 ஆயிரம்தொன் உணவுபொருள்கள் சேமித்து வைப்பதற்கு களஞ்சியம்

## அரச அதிபர் தொண்டர் நிறுவனத்திடம் கோரிக்கை

சாவகச்சேரி, நவ. 22

சுமார் 10 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் களஞ்சியப் படுத்தக்கூடியவசதியுள்ள களஞ்சியம்ஒன்றை அமைத்து தருமாறு சர்வதேச தொண்டர் நிறுவனங்களிடம்வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் இந்தவேண்டுகோளை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில்இயங்கும் யாழ். செயலகத்தில் நடந்த யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு இருப்பிட வசதிகளையும், நிவாரண உதவிகளையும் வழங்கிஉதவுமாறும் சர்வதேச நிறுவனப் பிரதிநிதிகளிடம் கோரப்பட்டது (ஐ-3)

# கேரளத்தில் ஸ்ரீமாவோ உயிருக்கு பயமுறுத்தல்

## புலனாய்வு அறிக்கை தெரிவிப்பாம்

கேரளத்துக்கு வைத்தியசிகிச்சைக்கு வந்துள்ள ஸ்ரீலங்கா பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்று கிடைத்துள்ள புலனாய்வுத் துறை அறிக்கைகளையடுத்து அவருக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கேரளத்தின் தலைநகர் திருவனந்தபுரத்தில் ஆளுநர் மாளிகையில் தங்கியுள்ள அவரின் பாதுகாப்புக்காக ஆளுநர் மாளிகையைச் சுற்றி காவல்துறை பாதுகாப்பு விழங்கி யுள்ளதாகவும் —

விமானப்படை உஷார் நிலையில் உள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

# கிளினிக் நோயாளர்கள் சிகிச்சை பெற விசேட வசதி

யாழ். ஆஸ்பத்திரி கிளினிக்குகளில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் பகுதியில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ளதால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வரும் நோயாளர் எண்ணிக்கை மிக அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் 20 ஆயிரத்து 500 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சைக்கு வருவதால் ஏற்படும் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக வாரந்தோறும் பின்வரும் நாட்களில் குறித்த நோய்களுக்கான கிளினிக்குகள் நடைபெறும் என்று ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். அவை வருமாறு:-

★ திங்கட்கிழமை— நீரிழிவு நோய்.

★ செவ்வாய்— பொது நோய்கள்.

★ புதன்— குழந்தைகளுக்கான சிகிச்சை.

★ வியாளன்— உளநோய், மூளை நரம்பு, சத்திர சிகிச்சை, பெண்ணியல்நோய்.

★ வெள்ளி— கர்ப்பிணிகள்.

சனி— போலியோ தடுப்பூசி போடுதல். (ஐ-13)


## உடன் சந்திக்கவும்

யாழ்ப்பாணம் கலட்டியை சேர்ந்த திருமதி **நாகம்மா பொன்னுத்துரை** என்பவரை திருநெல்வேலியைச் சேர்ந்த **சிவா** என்பவர் சரசாலை மத்தி சன சமூக நிலையத்தடியில் உள்ள சின்னத்தம்பி என்பவரின் வீட்டில் சந்திக்கவும்.

தகவல்:
**சிவா**

(39358)

## மெடி எயிட்ஸ்
## MEDI AIDS

நல்லூர், கல்வியங்காடு, நாயன்மார்கட்டு ஆகிய இடங்களில் இயங்கி வந்த மேற்படி நிறுவனத்தில் கடமையாற்றிய ஊழியர்களை தற்போது இயங்க இருக்கும் இடமாகிய கண்டி வீதி, சாவகச்சேரியில் (சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில். ஜெயமதி களஞ்சியத்திற்கு பக்கத்தில்) உடனடியாக வந்து சந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

உரிமையாளர்

(59354)

## விற்பனைக்கு

Recordbarக்கு உகந்த GxC 39 D Akai Cassette deck, National radio Cassette, National Video deck தனி பெற்றோலில் பாவித்த Miniminer Car, Mits Ubishi ஆடம்பர கார் பெற்றோலுடன், சைக்கிள்கள் மலிவாக விற்பனைக்குண்டு.

**DR M. GANESARATNAM**
வல்லிபுர பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(39356)

## தேடுகின்றோம்

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த **நா. றோகன்** என்பவரை அவரது தாயாரான திருமதி நாகலிங்கம் என்பவர் கடந்த 18 ஆம் திகதியிலிருந்து தேடுகின்றார், கண்டவர்கள் கச்சாய் வடக்கு கச்சாய் கொடிகாமத்திலுள்ள ரட்ணா வைத்தியசாலையில் இருக்கும் அவரது தாயாருடன் தொடர்பு கொள்ளவும்.
(39269)

## தேடுகின்றார்

VIOLET METHER
என்பவர்
STANLEY SPENCER
என்பவரை தொடர்பு கொள்ள வேண்டுகின்றார்

சீ. நடராசா
மிருசுவில்

(39357)

## உடன் அறியத்தரவும்

யாழ். பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த
Dr. [ Mrs ] **விஸ்வபாரதி**
அவர்களின் தற்போதைய விலாசத்தை உடன் அறியத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S. M. பெர்னாண்டோ
மே/பா LION நவரத்தினம்
''விமலாஸ்''
இல. 9, நவீன சந்தை,
சாவகச்சேரி.
[39262]

## உடன் சந்திக்கவும்

கொழும்புத்துறை சுவாமியார் வீதியைச் சேர்ந்த
**இரத்தினம் குடும்பத்தினர்**
நா. முருகேசு, கரணவாய் தெற்கு கரவெட்டி
என்ற முகவரியில் உடன் தொடர்புகொள்ளவும்.
[39267]

## கொழும்பு விலையில் காலணிகள்

பாட்டா, D S. I. தோல் பாதணிகள்
கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்.

**வண்ணக் காலணிப் பூங்கா**

இல. 3, சறோஜா தங்க மாளிகை,
கீழ் மாடி, கண்டி வீதி,
சாவகச்சேரி.

[39271]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### விழித்து எழுங்கள்!

ஸ்ரீலங்காவின் சிங்கள இராணுவம் தமிழீழத்தின் பிரதான நகரங்களின் ஒன்றான — தமிழர்களின் வாழ்வியல் உயர்ச்சியின், நாகரிக வளர்ச்சியின் சின்னமான — யாழ்ப்பாண நகரத்தை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

பன்னிரண்டு வருட காலத்தின் பின்னர், ஸ்ரீலங்கா இராணுவத் துருப்புக்கள் யாழ். நகரில் கால் பாதிக்கப் போகின்றன. ஜே. ஆர்., பிரேமதசா, விஜேதுங்கா காலங்களில் ஈட்டமுடியாத ஒரு பெரும் சாதனையை தமது காலத்தில் எய்த முடிந்ததாக சந்திரிகாவும் அவரின் அரசினரும் வெற்றிப் பெருமிதம் கொள்கின்றனர்.

யாழ்ப்பாண நகரத்தை இராணுவம் கைப்பற்றினாலுங் கூட, அங்கு ஆள்வதற்கு மக்கள் இல்லை. இன்னும் சில நாள்களில் நாய்கள், ஆடு, மாடுகள் கூட அங்கு இருக்கப்போவதில்லை.

மக்கள் இல்லாத வெறும் பிரதேசத்தைக் கைப்பற்றுவது அரசாங்கத்தின் இராணுவ வெற்றியை அர்த்தமற்றதாக்கி — பயனற்றதாக்கி — விட்டது என்பது எல்லோரும் அறிந்த உண்மையே.

எனினும், யாழ்பாண நகருக்குள் கால் பதித்துள்ளதோடு சிங்களப் படையினரின் மனோநிலை பெரிதும் மாற்றம் கண்டுள்ளது. போரிட வேண்டும் என்ற உறுதியும் உற்சாகமும் புதிதாக ஒரு தென்பும் பிறந்துள்ளன என்பதனை மறந்துவிடக் கூடாது. சம்பளத்துக்காக இராணுவத்தில் சேர்ந்தாலுங்கூட, தமிழர்களைத் தோற்கடிக்க வேண்டும், தமிழர் தாயகத்தை முழுதாகக் கைப்பற்றித் தங்கள் கொத்தளங்களை நிறுவிவிட வேண்டும் என்று ஒரு புதிய ''வீரம்'' சிங்கள இளைஞரிடம் நிச்சயம் பிறந்திருக்கும்.

இந்தத் தருணத்தைத் தக்கவாறு பயன்படுத்தி அரசாங்கம் இராணுவத்துக்கு ஆட்திரட்டும் பணியை உடனடியாகத் தொடங்கியுள்ளது.

இது தமிழ் இளைஞர் யுவதிகளின் கண்களைத் திறக்க வேண்டும். மன ஆக்ரோசத்தை உண்டாக்க வேண்டும்.

அரசாங்கம் தமிழ் மக்களின் தாயகத்தைப் பிடிப்பதற்காக, தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்காக இராணுவத்துக்கு மேலும் ஆட்களைத் திரட்டுகிறது. யாழ்ப்பாண வெற்றியைத் தொடர்ந்து சிங்கள இளைஞர்கள் விருப்பத்துடன் படைக்கு ஆணி திரளப் போகிறார்கள்.

இதற்கு ஏட்டிக்குப் போட்டியாக — தமிழ் மண்ணையும், மக்களையும் பாதுகாப்பதற்குத் தமிழ் இளைஞர்கள் பல்லாயிரக் கணக்கில் படையணியில் சேர வேண்டும். அவர்களின் மானம், வீரம், ரோசம் என்ற நரம்புகளில் முறுக்கேற வேண்டும். இப்போதாவது மண்ணையும் மக்களையும் காப்பாற்றும் உணர்வு பிறக்க வேண்டும்.

எதிரி எமது மண்ணையும் மக்களையும் அழிக்க உறுதி கொண்ட பின்னர், அதனைத் தடுத்து நிறுத்தும் உணர்வும் செயலாக்க உணர்ச்சியும் ஒவ்வொருவருக்கும் தானாகவே பிறக்கவேண்டுமல்லவா? இப்போது உறங்கினால் தமிழர் வாழ்வு நிரந்தரமாகவே உறங்கிவிடும். இளைஞர், யுவதிகளே விழித்தெழுங்கள் உங்கள் வீரத்தைக் காட்டுங்கள்!

# புக்காரா குண்டு வீச்சில் வல்வெட்டியில் மூவர் பலி

## திங்கள் மாலை சம்பவம்

வடமராட்சி, நவ.22

வல்வெட்டித்துறை, வல்வெட்டிப் பகுதியில் திங்கள் மாலை 6-30 மணி அளவில் இடம்பெற்ற புக்காரா விமானக் குண்டுவீச்சு சம்பவத்தில் மூவர் உயிரிழந்தனர். எட்டுப் பேர் படுகாயமடைந்தனர். ஒரு வீடு தரைமட்டமாகியது. மேலும் ஆறு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

வல்வெட்டி பழைய பொலீஸ் நிலைய வீதிப் பகுதியில், மக்கள் குடியிருப்புகள் மீது அடுத்தடுத்து நான்கு குண்டுகளை புக்காரா வீசியது.

இச்சம்பவத்தில் திருநெல்வேலியில் இருந்து இடம்பெயர்ந்த சந்திரராசா விஜிதா (வயது 19)

திருநெல்வேலியில் இருந்து இடம் பெயர்ந்து வாதரவத்தையில் வசித்த அழகதுரை சசிகுமார் (வயது 21— இவர் விஜிதாவை வல்வெட்டிக்கு அழைத்துச் சென்றிருந்தபோதே அங்கு மரணமானார்.)

வல்வெட்டியைச் சேர்ந்த நாகலிங்கம் செல்லமாணிக்கம் (வயது 45) ஆகிய மூவருமே மரணமானவர்களாவர்.

விஜிதா ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் இடைவழியில் மரணமானார். மற்றைய இருவரும் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர்.

★ வல்வெட்டியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை துரைசிங்கம் (வயது 42 — தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளையார் மகாவித்தியாலய உப அதிபர்)

★ இராசப்பா சிவநேசன் (வயது 56)

★ சுப்பிரமணியம் சுரேஷ் (வயது 20)

★ தனபாலசிங்கம் மங்கயர்க்கரசி (வயது 61)

★ உரும்பிராய் வடக்கில் இருந்து இடம பெயர்ந்த சபாபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை (வயது 60)

★ மல்லாகத்தில் இருந்து இடம் பெயர்ந்த முத்துநாயகம் ராஜரஜனி (வயது 21)

★ மானிப்பாயிலிருந்து இடம்பெயர்ந்த நாகலிங்கம் வனஜா (வயது 41)

★ இவரது மகள் நாகலிங்கம் சாந்தி (வயது 21)

ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்தவர்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ 15-173-118)

## யாழ். இந்து ஆசிரியர் சம்பளம்

சாவகச்சேரி, நவ 22

யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்களினதும், ஊழியர்களினதும் இம்மாதத்துக்கான சம்பள காசோலைகள் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளன.

மீசாலை தெற்கில் பங்களா வீதியில் உள்ள பிரதி அதிபர் திரு. தா. அருளானந்தம் வீட்டில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பராமரிப்புப் பணிகளில் முன்பள்ளி ஆசிரியர்கள்

### புனர்வாழ்வுக் கழகம் ஏற்பாடு

முன்பள்ளி ஆசியர்களை இடம்பெயர்ந்த மக்களின் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கான ஒழுங்குகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

இடம்பெயர்ந்த மற்றும் நிரந்தரமாக இருக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள் தத்தமது வதிவிடங்களுக்கு அண்மையில் தொண்டாற்றுவதற்கு வசதியாக பின்வரும் நிலையங்களில் ஒன்றில் உள்ள முன்பள்ளி இணைப்பாளர்களுடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது:

★ கைதடி சித்த வைத்திய நிலையம்

★ மட்டுவில் ம. வி.

★ பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம்

★ இயற்றாலை தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிமனை.

★ கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.

★ சாவகச்சேரி இந்து கல்லூரி

★ வடமராட்சி — தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிமனை.

முன்பள்ளி ஆசிரியர்கள் போஷாக்குபற்றிய ஆய்விலும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## 'டெலிக்' பரீட்சை ஒத்திவைப்பு

எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவிருந்த டெலிக் இறுதிப் பரீட்சை ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக கொழும்பில் இருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## வடமராட்சி தென்மராட்சி மினிபஸ் சேவை ஆரம்பம்

தென்மராட்சி, நவ. 22

சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து பருத்தித்துறை, தாளையடி, பளை ஆகிய இடங்களுக்கான மினிபஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத்தினர் அறிவித்துள்ளனர்.

*பாதை இல 1*

பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு மாலிசந்தி வதிரிச் சந்தி, உடுப்பிட்டி, குஞ்சர் கடை நெல்லியடி கலிகைச்சந்தி, கனகன்புளியடிச் சந்தி நுணாவில் ஊடாக சாவகச்சேரிக்கும்.

*பாதை இல 2*

பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு மாலிசந்தி நெல்லியடி கலிகை, யார்க்கரு, கனகன்புளியடி நுணாவில் ஊடாக சாவகச்சேரிக்கும்

*பாதை இல. 3*

பருத்தித்துறை மாலி சந்தி, நெல்லியடி வரணி, கொடிகாமம், ஊடாக சாவகச்சேரிக்கும்.

சாவகச்சேரியிலிருந்து கொடிகாமம் ஊடாக பளைக்கும் —

சாவகச்சேரியில் இருந்து நுணாவில் ஊடாக கைதடிக்கும் —

சாவகச்சேரியிலிருந்து கச்சாய் ஊடாக பண்டிதர் குடியிருப்புக்கும் —

சாவகச்சேரியிலிருந்து தனன்கிளப்பு ஊடாக நாவற்குளிக்கும் —

சாவகச்சேரியிலிருந்து கண்டி வீதி வழியாக தாளையடிக்கும் —

பருத்தித்துறையிலிருந்து தாளையடிக்கும் — பஸ் சேவைகளை நடத்தி வருகின்றார். (இ-117)

## தென்மராட்சியில் புதிதாக மூன்று காவல் நிலையங்கள்

### எல்லைப் பிரதேசங்களும் அறிவிப்பு

சாவகச்சேரி, நவ. 22

தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் மக்களின் நலனை கருத்திற்கொண்டு தென்மராட்சி பகுதியில் மேலும் மூன்று காவல் பணிமனைகள் திறந்து வைக்கப்பட்டிருப்பதாக தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிவித்துள்ளார்.

கைதடி, கொடிகாமம், கிளாலி படகுத்துறை ஆகிய இடங்களில் இவை செயற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் சாவகச்சேரி, பளை ஆகிய காவல்துறை பணிமனைகள் தொடர்ந்து செயற்படும் என்றும் —

அவற்றுக்கான எல்லைப் பிரதேசங்கள் பின்வருமாறு வகுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றின் விவரம் வருமாறு:-

*கைதடி*

நுணாவில் சந்தி — பருத்தித்துறை வீதிக்கு மேற்குப் பக்கம், மட்டுவில், சரசாலை மேற்கு, கைதடி, நாவற்குழி, மறவன்புலவு மேற்கு

*சாவகச்சேரி*

சாவகச்சேரி, வேம்பிராய், சரசாலை, கனகன்புளியடி, நுணாவில் சந்தி, மறவன் புலவு, தனங்கிளப்பு.

*கொடிகாமம்*

மிருசுவில் — கெற்பலி வீதிக்கு மேற்குப்பக்கம், மிருசுவில் — நாகர்கோவில் வீதிக்கு மேற்குப்பக்கம், கொடிகாமம், வரணி, கச்சாய் - புத்தூர்ச் சந்தி, மந்துவில்.

*பளை*

புதுக்காடு, பளை, புலோப்பளை, மாசார், எழுதுமட்டுவாள், கிளாலி, மிருசுவில்— செற்பலி வீதிக்கு கிழக்குப் பக்கம் மிருசுவில் — நாகர்கோவில் வீதிக்கு கிழக்குப் பக்கம் வரை.

*கிளாலி*

கிளாலி படகுத்துறைப் பிரதேசம்.

இப்பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் தமது எல்லைக்குட்பட்ட காவல் பணிமனைகளில் முறைப்பாடுகளை செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## அன்று வந்தது உயிர்காக்க இன்று போவது ஊர்காக்க

பூவும் சொரிந்து, காயும் சொரிந்து
அடி வேரும் கருகி
நாம் வளர்த்த முற்றத்து மரம் பட்டுப் போனதா?
அடைவைத்த கோழியுப,
அதைச்சுற்றி வளைய வந்த குஞ்சுகளும்,
செத்துப்போய் விட்டனவா?
சுள்ளி பொறுக்கி நாங்கள் கட்டிய சிறுகூட்டில்
இனிச்சென்று வாழ முடியாதா?
கோயில் மணி கேட்டுக் கண்திறந்து
கும்பிட்டெழும் வாழ்வு முற்றிற்றா?
யார் சொன்னது?
ஒன்றுக்கும்.., ஓரழிவும் இல்லை
எல்லாம் எம் கைவரும்.
மீண்டும் ''பூக்கும் வாழ்வு'' புலரும்.
இப்போது;
பலசாலிக்குச் சளிபிடித்த மாதிரி
ஒரு சின்ன நோவு... அவ்வளவுதான்.
விரலில் நகச்சுற்று வருமே அது மாதிரி.
இதற்காகவா புலம்பித் திரிகின்றாய்?
கொள்ளிவைத்து எள்ளும் நீரும் இறைத்ததுபோல
ஏன் துக்கப் படுகின்றாய்?
நேற்றே நீ விழிதிறந்திருப்பாயானால்...
எதிரியுன்வாசல் எழுந்திருக்கமுடியாது.
பிள்ளையொன்றைப் போருக்குப் போவென்று
சொல்லியிருப்பாயானால்...
இத்துயர் சூழ்ந்திராது.
கிணற்றடியைச் சுற்றி வேலிகட்டி
அடுத்தவன் கோழிக்குக் காவலிருந்தாய்.
காயப்போட்ட மாங்காய் வற்றலில்
காகம் விழுமெனக் காத்திருந்தாய்.
ஊரெரிக்கப் பகை வருமென்று
நீ எதிர்பார்க்க வில்லைத்தான்?
வந்துவிட்டது; இனியென்னவழி?
கேள்விக்குப் பதில்தேடு... கேடு மறையும்.
குண்டும், குழியுமானாலும் எம்வீடு செல்லும்
அந்தத் தெரு வேண்டும்.
வத்தல்குழம்பு வைக்கச் சட்டிக்கரணை வேண்டும்.
தேன்கதலிப் பழமும்,
தித்திக்கும் மாம்பழமும்,
மொச்சை மணக்கும் மேச்சற்கிடாயும்,
வேண்டுமெனில் ஊர்திரும்ப வேண்டும்.
குஞ்சை இறாஞ்சவரும் பருந்துக்கெதிராக
தாய்க்கோழி போரிடும்.
குட்டிக்குக் கிட்டப்போனால்
குரங்கு கூடக் குதறிவிடும்.
நீமட்டும்; பேசாமல் இருந்துவிட்டு
ஊருக்குப்போக ஆசைப்படுகிறாய்.
அன்று வந்தது உயிர்காக்க...
இன்று போவது ஊர்காக்க
இதுவே வழி,
உடனே விழி.

— புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் 6க்கு மேற்பட்ட பொலீஸார் கொல்லப்பட்டனர்

## தாக்குதலில் பொலீஸ் நிலையம் கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 22
அம்பாறை மாவட்டம் லகுகலையில் உள்ள அதிரடிப் படைப் பொலீஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை வேளை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி அதனைக் கைப்பற்றினர்.

ஐந்து நிமிட நேரம் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் ஆறுக்கு மேற்பட்ட பொலீஸார் கொல்லப்பட்டனர்.

பொலீஸ் நிலையத்தைக் கைப்பற்றிய புலிகள் பின்னர் அதனைத் தீமுட்டி எரித்தனர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 2 ஆம் லெப்டினன்ட் சுந்தரலிங்கம் வீரச்சாவடைந்தார்.

பொலீஸ் நிலையத்தில் இருந்து புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

ரி 81 எல். எம். ஜி — 01, ஏ. கே. எல். எம். ஜி — 01, 40 மி. மீ. கிரனேட் பிஸ்ரல் — 02, ஏ. கே. துப்பாக்கி — 02, ஷொட் கண் — 01, ஏ. கே மகஸீன் — 08, ரி 81 எல். எம் ஜி றம் மகஸீன் — 04, ஏ. கே. எல். எம். ஜி. றம் மகஸீன் — 05, 40 மி. மீ. ஷெல் — 07, ஐ. எம். ரவை — 3,900, 5.56 ரவை — 1.400, பராலைட் — 03.

(ஐ)

## மா, அரிசியுடன் 'குமண' இன்று வருகின்றது!

சாவகச்சேரி, நவ. 22
ஆயிரத்து 700 மெற்றிக் தொன் மா, ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி என்பன வற்றுடன் 'குமண' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

இக்கப்பலில் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் இம்மாத பென்சன் வவுச்சர்களும், ஒரு தொகுதி அடையாள அட்டைகள் மற்றும் ஆயிரம் தபால் பொதிகள் என்பனவும் எடுத்து வரப்படுகின்றன.

இன்று காலை பருத்தித்துறை இறங்கு துறைக்கு வந்தடைந்தவுடனேயே கப்பலில் இருந்து உடனடியாகப் பொருள்களை இறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-3)

# 1,000 தபால் பொதிகள் இன்று வருகின்றன

## விநியோகிக்க விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 22
''குமண'' கப்பலில் இன்று எடுத்துவரப்படும் ஆயிரம் தபால் பொதிகளையும் தரம் பிரித்து பொதுமக்களுக்கு விநியோகிக்க தபால் பகுதியினர் விசேட ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக கொழும்பில் தேங்கிக் கிடந்த தபால் பொதிகளில் ஆயிரம் பொதிகளே இன்று வந்துசேரவுள்ளன.

நீண்டகால இடைவெளியின் பின் முதல் முறையாக எடுத்துவரப்படும் இந்தத் தபால்களை — வலிகாமம் பகுதியில் இருந்து லட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்துள்ள நிலையில் — அவர்களுக்கு விநியோகிக்க தபால் பகுதியினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்,

இந்த தபால் பொதிகளில் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கான தபால்கள் அந்தப் பகுதி தபாலகங்கள் ஊடாக வழமைபோல் விநியோகிக்கப்படும்.

வலிகாமம் பகுதி மக்களுக்கான தபால்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வைத்து உரிய விலாசதாரர்களிடம் நேரில் விநியோகிக்கப்படவுள்ளன.

இதற்கென சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் யாழ். பிரதம தபாலகத்தின் விசேட கருமபீடங்கள் இயங்கவுள்ளன.

இன்று வந்து சேரும் தபால்கள் அங்கு வைத்து தரம் பிரிக்கப்பட்டு நாளை முதல் விநியோகிக்கப்படும்.

விநியோகிக்கப்படாமல் எஞ்சும் தபால்கள் பின்னர் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இங்கிருந்து இடம் பெயர்ந்து அங்கு சென்றோருக்கு அங்கு வைத்து விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வலிகாமம் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது கடிதங்களைப் பெற்றுக்கொள்ள ஒரே நாளில் அங்கு வந்து குவிய வேண்டாம் என்று யாழ். பிரதம அஞ்சல் அதிபர் திரு. சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடிதங்கள் விநியோகிக்கப்படும் அஞ்சல் பிரிவுகள் நேரம், நாள் போன்ற விவரங்கள் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உஐ-3-117)

## கொழும்பின் பாதுகாப்பு உச்சநிலையில்

கொழும்பு, நவ. 22
வெளியிடங்களில் இருந்து இராணுவத்தினரையும், பொலீஸாரையும் கொண்டு வந்து கொழும்பு நகரின்பாதுகாப்பை அதி உச்ச நிலையில் பலப்படுத்தியுள்ளோம்.

— கொழும்பு, பிரதேச பிரதிப்பொலிஸ்மாஅதிபர் கொட்டகெதெனிய பி. பி. ஸிக்கு அளித்தபேட்டியில் இதனைத் தெரிவித்தார்.

(இ-ஐ)

## அரசியல் தீர்வு யோசனை குறித்து அமைச்சர் பீரிஸ்

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அரசியல் நடவடிக்கைகள் இப்போது முழுமூச்சாக முடுக்கி விடப்பட்டுள்ளன.

இப்படி அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கையில் எட்டப்பட்டுள்ள வெற்றியை ஒட்டியே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

# கொழும்பில் தமிழர் மத்தியில் பதற்றம்!

கொழும்பு, நவ. 22
தற்போது நடைபெறும் யுத்தத்தில் படையினர் ஈட்டும் வெற்றிகளைக் கொண்டாடுவதற்கு கொழும்பிலும் தென் பகுதியின் ஏனைய இடங்களிலும் ஏற்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளதை அடுத்து அங்குள்ள தமிழர்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

படையினரைப் புகழும் சுவரொட்டிகளும், பதாகைகளும் தலைநகரில் எங்கும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெற்றியைக் கொண்டாடுவது என்ற சாக்கில் சிங்களக் குண்டர்கள் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடும் என தமிழர்கள் அஞ்சுகின்றனர்

தமிழர்கள் மீது இன வன்செயல் கட்டவிழ்த்துவிடப்படும் அபாயம் இருப்பதாக தமிழ் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் மக்களைத்தாக்கி குழப்பம் ஏற்படுத்தசிங்களவர்கள் முயன்றால் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும் தமிழர்கள் தயாராக இருப்பதாக பெயரை வெளியிட விரும்பாத தமிழர் ஒருவர் கொழும்பில் கூறியதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

(ஐ-6)

# ஒன்றரை லட்சம் மக்கள் வன்னிப் பகுதி சென்றனர்

சாவகச்சேரி, நவ. 22
இடம்பெயர்ந்த மக்களில் ஒரு லட்சத்து 41 ஆயிரத்து 800 பேர் கடந்த ஞாயிற்றுக் கிழமை வரை கிளாலியூடாக வன்னிப் பகுதிக்குச் சென்றுள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்துள்ள மக்களில் நாளாந்தம் சராசரி 5 ஆயிரம் பேர் வரை கிளாலி ஊடாக கிளிநொச்சிக்குச் செல்கின்றனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து செல்லும் மக்களைத் தங்க வைப்பதற்கென வன்னிப் பகுதியில் 47 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 18 முகாம்கள் கிளிநொச்சியிலும், 10 முகாம்கள் முல்லைத்தீவிலும், 5 முகாம்கள் மன்னாரிலும், 12 முகாம்கள் முழங்காவில் பகுதியிலும் 2 முகாம்கள் வவுனியா ஓமந்தைப் பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த 47 முகாம்களிலும் 3 ஆயிரத்து 400 குடும்பங்கள் தங்கியுள்ளன. ஏனையோர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

(ஐ-3)

## பிரசைகள் குழு உறுப்பினர் கலந்துரையாடல்

சாவகச்சேரி, நவ 22
யாழ்ப்பாண பிரசைகள் குழு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத்தில் நடைபெறவிருக்கிறது.

(இ-3)

## யாழ். நகரில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டதும் கொழும்பு தமிழர்களுக்குப் பாடம் புகட்டப் போவதாக காடையர் கும்பல்கள் கூறிவருவதாக தமிழ் மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

யாழ். மீதான தாக்குதலை அடுத்து தற்கில் மேலோங்கி வரும் சிங்கள இனவாதம் யுத்தத்தில் வெற்றியீட்டிய பின்பும் தமிழர்களுடன் அரசு நியாயமான அரசியல் அதிகாரப்பரவலாக்கலைச் செய்யமுடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளது — என்றார்.

(ஐ-6)

## அரியாலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாக மிகவும் மெதுவாகவே முன்னேறிவருவதாக இலங்கை வானொலி அறிவித்தது.

நேற்று முன்தினம் நடந்த சண்டையில் ஒரு அதிகாரி உட்பட நான்கு படையினர் கொல்லப்பட்டனர். 3 அதிகாரிகளும் 37 படையினரும் காயமடைந்தனர்.

(இ-ஐ-3)

## பொலிகண்டி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தோனிப்பிள்ளை மேரிரூபி (வயது 13)-

அவரது சகோதரி அந்தோனிப்பிள்ளை மேரி இந்திரா வயது 7 —(பொலிகண்டி சின்னாவளையைச் சேர்ந்தவர்கள்)

கிருஷ்ணசாமி இராசகோபால் (வயது 18)— (மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்தவர்).

அன்ரனி அமலதாஸ்(வயது 10 பொலிகண்டி ஆலடி).

கற்கோவளத்தைச் சேர்ந்த குழந்தை வடிவேல் குணம் (வயது 23 — வலது கை முழங்கையுடன் துண்டிக்கப்பட்டார்)

வைத்திலிங்கம் ஸ்ரீரங்கன் (வயது 27 — இவரும் கற்கோவளத்தைச் சேர்ந்தவர்.)

ஆகியோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(இ-173-80-15-118)

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் செல்வமாணிக்கம்

தும்பளை மணல்ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வல்வெட்டியை வாழ்விடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வமாணிக்கம் (சின்னப்பு) நேற்று முன்தினம் அகால மரணமானார்.

அன்னார் தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகலிங்கம் - மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், வல்வெட்டியைச் சேர்ந்த சுந்தரம் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், அகிலன், அற்புதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா, செல்வகுமார், திருமதி செல்வமலர், திருமதி செல்வரமணி, திருமதி செல்வமணி, திருமதி செல்வதி ஆகியோரின் சகோதரனும், குலராஜசிங்கம், மகேஸ்வரன், ஸ்ரீஸ்கந்தராஜா, சூரியகுமார், சுந்தரம் டிவகலாலா, இந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (21-11-95) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணியளவில் மணல்ஒழுங்கை தும்பளையில் இடம்பெற்று பூதவுடல் தும்பளை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுந்தரம் டிவகலாலா

மணல் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை.

(சி/3103)

## மரண அறிவித்தல்கள்

### என். செல்வமாணிக்கம்

திரு. சுந்தரம் டிவகலாலாவின் (வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளரும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்) சகோதரி இராஜேஸ்வரி ன் கணவர் என். செல்வமாணிக்கம் 20 ஆம் திகதி வல்வேட்டித்துறையில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் காலமானார்.

தகனக் கிரியைகள் நேற்று 21 ஆம் திகதி இடம் பெற்றன.

பங்களாவீதி,
மீசாலை.
(சி-3102)

மணல் ஒழுங்கை
தும்பளை,
பருத்தித்துறை.

### சண்முகராசா ஜோதிவதனம்

மாசியப்பிட்டி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், தற்போது தனங்கிளப்பை வதிவிடமாகவும் கொண்ட ச. ஜோதிவதனம் நேற்று அகாலமரணமானார்

அன்னார் போராளி இளம்சித்திரனின் சகோதரனாவார். அன்னாரின் பூதவுடல் தனங்கிளப்பு இல்லத்தில் இருந்து மாலை 4 மணியளவில் சாவகச்சேரி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. ஸ்ரீந்தரன்
(மருமகன்)

தனம்கிளப்பு,
சாவகச்சேரி.

(39359)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 22-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org